### இசாயாஸ் ஆகமம் 40:31

ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்தவரோ எப்போதும் புது பலம் பூண்டவராய்ச் சிறகுகள்கொண்டு கழுகுகளைப்போல் பறந்தோடுவர், ஆயினுங் களைக்கமாட்டார்; நடந்து போவர்; பலங்குன்றவுமாட்டாராமே.

### தெசலோனிக்கேயர் 1 5:11

ஆனதால், நீங்கள் இப்போது செய்துவருகிறபடியே ஒருவரொருவரைத் தேற்றி, ஒருவரொருவருக்கு நன்மாதிரியாயிருங்கள்.

### இசாயாஸ் ஆகமம் 43:2

நீ சலங்களைக் கடக்கையில் நாம் உன்னோடிருப்போம்; நதி களும் உன்னை அமிழ்த்தவறியாது, தீயில் உலாவினும் எரிந்துபோக மாட்டாய், அக்கினியும் உன் முன் தணலற்று நிற்கும்.

### ஷேஜாசுவாவின் திருவாகமம் 1:9

பலங்கொண்டு திடமனதா யிருவென்று இதோ நாம் உனக்குக் கற்பிக்கிறோம். திகைக்கவும் மதி கலங்கவும் வேண்டாம். ஏனென் றால் நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருப்பார் என்றருளினார்.

### உபாகமம் 31:8

உங்களை நடத்துபவராகிய கர்த்தரே உன்னோடு இருப்பா ரல்லாதே அவர் உன்னை விடவும், கை நழுவவும் மாட்டாராகையால் நீ அஞ்சவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 11:28

வருந்திச் சுமை சுமந்திருக்கிற வர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில் வாருங்கள், நான் உங்க ளைத் தேற்றுவேன்.

### கொரிந்தியர் 2 1:3-4

சர்வேசுரனும் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய பிதாவும், இரக்கங்களின் தகப்பனும், சர்வ ஆறுதலின் தெய்வமுமாயிருக்கிறவர் ஸ்துதிக்கப்படுவாராக. (எபே.1:3; 1 இரா. 1:3.) நாங்களே சர்வேசுரனிடத்தில் பெற்றுக்கொள்ளுகிற ஆறுதலைக்கொண்டு எவ்வித இடையூறுகளிலும் அகப்பட்டிருக்கிறவர்களுக்கு நாங்களும் ஆறுதல் வருவிக்கத் திராணியுள்ளவர்களாயிருக்கும்படிக்கு எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் அவரே எங்களைத் தேற்றிவருகிறார்.

### கொரிந்தியர் 1 15:58

ஆகையால் நமக்குப் பிரியமான சகோதரரே, ஆண்டவரிடத்தில் நீங்கள் படுகிற பிரயாசம் வீணாய்ப் போகிறதில்லையென்று அறிந்து, நிலை மையுள்ளவர்களாயும், அசையாத வர்களாயும், இடைவிடாமல் ஆண்ட வருக்குரிய கிரியைகளை மிகுதியாய்ச் செய்பவர்களாயும் இருப்பீர்களாக.

### சங்கீதங்கள் 121:1-2

ஆண்டவருடைய வீட்டுக்குப் போவோமென்று எனக்குச் சொல்லப் பட்டதுகளைப் பற்றிச் சந்தோஷப் பட்டேன். எருசலேம் நகரே! எங்கள் பாதங் கள் உன் ஒலிமுக வாசல்களில் நிலை நின்றன.

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 10:24-25

பரம அன்புக்கும் நற்கிரியைகளுக் கும் நமக்குத் தூண்டுதலுண்டாகும் படி ஒருவரை ஒருவர் கவனிப்போமாக. சிலருக்குத் துர்வழக்கமாய் இருக் கிறதுபோல நாம் சபைக்கூட்டத்தை விட்டுவிடாமல் ஒருவரை ஒருவர் தேற்று வோமாக. அந்த மகாநாள் எவ்வளவுக்கு நெருங்கக் காண்பீர்களோ அவ்வளவுக்கு அதிகமாய் இவ்விதஞ் செய்யுங்கள்.

### சங்கீதங்கள் 31:24

### சங்கீதங்கள் 32:8

பூமி முழுவதுங் கர்த்தருக்குப் பயப்படுவதாக! உலக வாசிகளெல் லாரும் அவருக்கஞ்சி நடுங்கக்கட வார்கள்.

### இசாயாஸ் ஆகமம் 43:4

நமது கண்களுக்கு நீ கனமுற்ற தாயும், விலையேறப்பெற்றதாயும் ஆனது தொட்டு உன்னை விசேஷ விதமாய் நேசித்தோம்; உனக்காக மனிதரை (பிறர்) கையளிப்போம், உன் சீவனுக்காகச் சனங்களைப் போக்கடிப்போம்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 16:33

என்மட்டில் நீங்கள் சமாதானத்தைக் கொண்டிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். இவ்வுலகத்தில் உங்களுக்கு நெருக்கிடை உண்டாகும்; ஆயினும் திடமாயிருங்கள். நான் உலகத்தை ஷெஜயித்தேன் என்று திருவுளம்பற்றினார். (அரு. 14:27.)

கொரிந்தியர் 1 16:13

விழிப்பாயிருங்கள்; விசுவாசத் திலே நிலைமையாயிருங்கள்; வீரராய் நடந்துகொள்ளுங்கள், திடமாயிருங்கள்.

சங்கீதங்கள் 23:4

வீணில் தன் ஆத்துமாவை உபயோகப்படுத்தாமலும், தன் புறத் தியானுக்குக் கபடாய் ஆணை யிடாமலுங் கரங்களில் மாசற்றவனும் இருதயத்தில் பரிசுத்தமுள்ளவனுமாயிருப்பவன்தான்.

பழமொழியாகமம் 14:23

எவ்வகைத் தொழிலிலுஞ் சம்பத்துண்டு; மிகு பேச்சு எங்கேயோ அங்கே அடிக்கடி எளிமையாம்.

கொரிந்தியர் 2 4:17

ஏனெனில் இம்மையில் இலகுவாயும் ஒரு நொடிப்பொழுதுக்குமாத் திரமிருக்கிற நமது துன்பமானது நித்திய கனத்தையுடைய மகிமைப்பிரதாப மகத்துவத்தை அளவின்றிப் பெறுவிக்கும். (உரோ. 8:18.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:27

சமாதானத்தை உங்களுக்கு வைத் துவிட்டுப் போகிறேன்; என் சமாதானத் தை உங்களுக்குத் தருகிறேன். உலகம் கொடுக்கிறதைப்போல நான் (அதைக்) கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், அஞ்சாமலும் இருப்பதாக.

உரோமாபுரியார் 1 15:5

பொறுமையையும், ஆறுதலையும் தந்தருளுகிற சர்வேசுரன் சேசுக்கிறீஸ்து நாதருக்கு ஒத்தவண்ணம் நீங்கள் ஒரு வருக்கொருவர் ஏக சிந்தையுள்ளவர்க ளாகும்படி உங்களுக்குக் (கிருபை) செய்வாராக. (1 கொரி. 1:10.)

உரோமாபுரியார் 1 8:31

இவைகளைப்பற்றி நாம் என்ன சொல்லுவோம்? சர்வேசுரன் நம்முடைய பாரிசமாயிருந்தால் நமக்கு விரோதமா யிருப்பவன் யார்?

சங்கீதங்கள் 90:17

உரோமாபுரியார் 1 15:2

உங்களில் ஒவ்வொருவனும் நல் விருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி பிறனுக்குப் பிரியமாக நடக்கக்கடவான்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:6-7

இரண்டு காசுக்கு ஐந்து அடைக்க லங்குருவிகள் விற்கிறதல்லவோ? ஆயி னும் அவைகளில் ஒன்றானாலும் சர்வேசுரனுடைய சமுகத்தில் மறக்கப்படுவதில்லை. உங்கள் தலை உரோமங்களெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன; ஆகை யால் நீங்கள் அஞ்சவேண்டாம்; அநேகம் அடைக்கலங்குருவிகளைவிட நீங்கள் அதிகவிலையுள்ளவர்களாயிருக்கி றீர்கள். (லூக். 21:18)

கொரிந்தியர் 2 8:12

கொடுக்கும்படி ஒருவனுக்கு நல்ல மனமிருந்தால், அவன் சக்திக்கு மிஞ்சினதல்ல, அவன் சக்திக்குத் தக்கது (கொடுப்பது) அங்கீகரிக்கப்படும்.